பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 13 | வியாழக்கிழமை | 30.10.2025 | அதிர்வு 091

## சிறை செல்ல நான் தயார்!

### கம்மன்பில அறிவிப்பு



"ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பேரணி எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி நுகேகொடயில் நடைபெறவுள்ளது. 06

# கூட்டாட்சி முறைமை குறித்து தமிழ்த் தரப்புடன் பேசத் தயார்

## ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் கூறினர் என சுமந்திரனிடம் சுவிஸ் தூதுவர் தெரிவிப்பு



இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (சமஷ்டி) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக அண்மையில் சுவிட்ஸர்லாந்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறினார்கள் என்று இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனிடம் தெரிவித்தார். 07



# பாதாளக் குழு ஊடாக எதிரணியினரை படுகொலை செய்ய அரசு சதித் திட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி பகிரங்கக் குற்றச்சாட்டு

"எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பாதாள உலகக் குழு ஊடாக சுட்டுப் படுகொலை செய்ய இந்த அரசு சதித் திட்டம் தீட்டியுள்ளதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா குற்றஞ்சாட்டினார். 07



### அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றி சிந்திக்காமல்

# நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க ஒன்றிணையுங்கள்!



## அரசியல் கட்சிகளிடம் டிலான் வலியுறுத்து

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் கோரிக்கையாகும். பல வருடங்களாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அடுத்த ஜனாதிபதித் 07




நெருக்கடிகள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றவர்கள் இரண்டு விதமான அணுகுமுறையை வெளிப்படுத்துவார்கள்.

நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு விருப்பமில்லாதவர்கள் மற்றும் அவற்றுக்கு முகம் கொடுக்க அஞ்சுபவர்கள் அவற்றை எதிர்கொள்ளாமல் தள்ளிப்போட்டுக் காலத்தை இழுத்தடித்துச் சமாளிக்கப் பார்ப்பார்கள்.

திராணி உள்ளவர்கள் – அவற்றுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற திடசங்கற்பம் கொண்டவர்கள் – துணிச்சலோடு அவற்றை எதிர்கொண்டு தீர்க்க முயலுவார்கள்.

இது, சாதாரண மக்களுக்கு மாத்திரம் அல்ல, அரசியல் தலைவர்களுக்கும் பொருந்தும்.

இந்த நாட்டில் இதுவரை இருந்து வந்த அரசியல் தலைவர்கள் பலருக்கும் ஒன்றில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அல்லது பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயமான தீர்வை வழங்கும் விருப்பம் இருக்கவில்லை. மற்றும் சிலருக்கோ அந்த விருப்பம் இருந்தாலும், 06

# அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம்

## மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துங்கள் அநுர அரசிடம் டிலான் பெரேரா இடித்துரைப்பு



"மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம். அந்தச் சபைகளை மக்கள் பிரதிநிதிகளே ஆள வேண்டும். எனவே, உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைகளை ஆளுநர்கள் ஊடாக ஆள்வது ஜனநாயகம் அல்ல. எனவே, தமது பிரச்சினைகளை தமது பிரதிநிதிகள் ஊடாகத் தீர்த்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம். எனவே, தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அநுர அரசு இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.

# அநுர அரசுக்கு எதிரான பேரணியில் மலையகக் கட்சிகளும் பங்கேற்காது?

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க்கட்சிகளால் முன்னெடுக்கப்படவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் மலையகக் கட்சிகள் பங்கேற்காதென நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராகவே நவம்பர் 21 ஆம் திகதி இந்தக் கூட்டம் நடத்தப்படுகின்றது என எதிரணிகள் அறிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா மகாஜன கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மலையகத்தின் இரு பிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன இக்கூட்டத்தில் பங்கேற்காது எனத் தெரியவருகின்றது.

புதிய எதிர்க்கட்சி கூட்டணி தொடர்பில் அறிவிப்பு விடுப்பதற்காக கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பிலும் மேற்படி கட்சிகள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபை தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு




மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்காக 10 பில்லியன் ரூபா செலவின மதிப்பீட்டை நிதியமைச்சு அங்கீகரித்துள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் முறைமை தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு கிடைக்கப்பெற்ற பின்னர் தேர்தலை நடத்த முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைத் தேர்தலை உடனே பழைய முறைமையில் நடத்துங்கள்!

## அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையின் கீழ் விரைவில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். பழைய முறைமையின் கீழ் அந்தத் தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லையேல் தேர்தல் மேலும் இழுத்தடிக்கப்படக்கூடும்.

விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையே நாம் விடுக்கின்றோம்.

மாகாண சபை முறைமை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. எனினும், வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மாகாண சபை முறைமை அவசியம். அதனை நான் ஏற்கின்றேன். அதற்குரிய நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.” – என்றார்.

# மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் வன விலங்குகளின் அச்சுறுத்தல் இல்லை

## சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை அறிவிப்பு




மத்தளை சர்வதேச விமான நிலையம் வன விலங்குகளின் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பான விமான நிலையமென சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை உறுதிப்படுத்தியுள்ளது.

விமான நிலையத்திற்கு வன விலங்குகளிடமிருந்து ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தடுக்கப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கு அமைய இந்த உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மத்தளை விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் விமான பயணங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இந்த விமான நிலையத்திற்கு தற்போது 04 விமான சேவைகள் இயக்கப்படுகின்றன.

புதியவிமானநிறுவனங்கள்வருவதன் மூலம்விமானநிலையத்தின்செயற்பாட்டு நட்டங்களைக் குறைத்துக்கொள்ள முடியுமென பிரதிமைச்சர் ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

# பிறந்து 3 மாதங்களேயான பெண் குழந்தை உயிரிழப்பு

பால் ஊட்டி நித்திரைகொள்ள கொள்ள வைத்த மூன்று மாத பெண் குழந்தை ஒன்று மூக்காலும் வாயாலும் இரத்த வாந்தி எடுத்த நிலையில் உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை நல்லிணக்கபுரம், மாவிட்டபுரம், கீரிமலையைச் சேர்ந்த அரியதாஸ் கவிஸ்நவி என்ற குழந்தையாகும்.

நேற்று புதன்கிழமை காலை குழந்தைக்கு பால் ஊட்டிய பின்னர் வாயாலும் மூக்காலும் இரத்த வாந்தி எடுத்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக கூறப்பட்டது.

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை காங்கேசன்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.








# அரச, தனியார் பஸ் சேவை குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஆராய்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ் சேவையின் எதிர்காலத் திட்ட முன்மொழிவு குறித்தும் அதன் சவால்களை ஆராயும் முகமாகவும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகளது பிரசன்னத்துடன் நேற்று கள விஜயம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் மற்றும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிவகரன், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ். மாநகர மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள், துறைசார் அதிகாரிகள், தனியார் போக்குவரத்து சேவையின் தலைவர், அரச போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழுவே இந்தக் கள விஜயத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது நெடுந்தூர சேவை பஸ் நிலையம், இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். மத்திய பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன், குறித்த இரு பஸ் நிலையங்களின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி, இருக்கும் சவால்கள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.










# நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல் நடத்துமாறு எதிர்க் கட்சி கோரிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரியவை நாடாளுமன்றத்துக்கு வரவழைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சியினரால், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த கலந்துரையாடலை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சபாநாயகர் தற்போது வெளிநாட்டுக்கு சென்றுள்ளதால், சபாநாயகரின் அலுவலகத்தினூடாக மேற்படி கோரிக்கை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பலாலி காணியை விடுவிப்பது தொடர்பில் கொழும்பில் உயர் மட்ட கலந்துரையாடல்



யாழ்ப்பாணம் – பலாலி பிரதேசத்தில் எஞ்சியுள்ள தனியார் காணிகளை உரிய உரிமையாளர்களிடம் விரைவாக ஒப்படைப்பது தொடர்பில் கவனம் செலுத்தி, செயற்பாட்டு மற்றும் நிர்வாகத் தடைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

குறிப்பாக, இராணுவத்தின் கட்டம் கட்டமான பின்வாங்கல் குறித்து மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலுவலகத்தில், இந்த பகுதிகளில் உள்ள தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் விடுவிப்பது தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், தொடர்ந்துள்ள சவால்களை எதிர்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் நிர்வாக அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

குடிமக்களின் சொத்துக்களில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் அதேவேளை, அத்தியாவசிய பாதுகாப்புத் தளங்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய எல்லைகளைத் திட்டமிடுவது குறித்து இறுதி செய்யப்பட்டன.

காணிகளை விடுவிக்கும் பணியை துரிதப்படுத்த இராணுவத்தின் கட்டம் கட்டமான பின்வாங்கல் குறித்து மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக் கருத்தாய்வுகளுடன் முழுமையாக ஒத்துப்போகும் வகையில், இந்தச் செயல்முறை வெளிப்படையாகவும், சமத்துவமாகவும் பேணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தகைய தீர்வைக் கொடுக்க முயல்வதால் எழும் நெருக்கடியை எதிர்கொள்ளும் திட சங்கற்பமோ திராணியோ இருக்கவில்லை.

இந்த இரண்டு தரப்பினரையும் விடுத்துத் தாம் வேறானவர், துணிச்சல் மிக்கவர், தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு காணும் திடசங்கற்பம் கொண்டவர் என்று 'படம் காட்டித்தான்' அநுரகுமார திஸநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதியானார். அந்தப் பம்மாத்து மூலம்தான் பொதுத்தேர்தலில் தமிழர் பிரதேசங்களில் இருந்தும் கணிசமான ஆதரவைப் பெற்றார்.

ஆனால், அன்று தொடக்கம் தாமும் முன்னிருந்த தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் போல தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விருப்பமற்றவராகவோ அல்லது அதைச் செய்வதற்கான துணிச்சல் இல்லாத தொடை நடுங்கித் தலைவராகவோதான் இருக்கின்றார் என்பதையே தொடர்ந்தும் தனது செயற்பாடுகள் மூலம் அல்லது செயலின்மை மூலம் வெளிப்படுத்தி வருகிறார்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை 13ஆவது திருத்தம் உட்பட அரசமைப்பில் உள்ள அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவேன் என்றும், மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்துவேன் என்றும் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து, அதிகாரத்துக்கு வந்த அநுரகுமார திஸநாயக்க சுமார் 14 மாதங்கள் கடந்தும் தொடர்ந்தும் பம்மாத்துக் காட்டுகிறார்.

'ஒருபுறம் நாகம், மறுபுறம் வேடன்' என்பது போல இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் அவர் அல்லாடுகிறார் என்பது தெளிவானது.

ஒருபுறம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றித் தீர்வைக் காணும்படி சர்வதேசத் தரப்புகளில் தொடங்கி எதிர்க் கட்சிகள் வரை, சிறுபான்மைத் தரப்பினர் உட்பட வலியுறுத்தல்கள் வலுத்து வருகின்றன. அவற்றுக்கு பதில் கூற முடியாமல் அவர் தடுமாறுகின்றார்.

மறுபுறம் அவரது கட்சிக்குள் அவருக்கு மிஞ்சியதாக வெளிப்படுகின்ற எதேச்சாதிகார சக்திகளின் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து, தடுமாறுகின்ற ஓர் அரசியல் தொடை நடுங்கியாகவே அவர் செயல்பட்டு காரிய மாற்ற முடியாமல் இருக்கின்றார்.

நாட்டு மக்கள் என்னவோ தமது இறைமையைத் தம் வாக்களிப்பின் மூலம் நாட்டின் நிறைவேற்றதிகாரத்தைத் தனி மனிதரான அநுரகுமார திஸநாயக்கவிடம்தான் கையளித்திருக்கிறார்கள். ஆனால் அவரோ அதனைத் தமது அரசுக் கூட்டணியின் பிரதான பங்காளிகளான தனது ஜே.வி.பி. கட்சியின் அரசியல் குழுவிடம் அந்த அதிகாரத்தை அடகு வைத்தவர் போல, அந்த அரசியல் குழுவை மீறி, அரசியல் ரீதியான முடிவுகளை எடுத்துச் செயல்பட முடியாதவராகத் தடுமாறுகின்றார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த அரசியல் குழுவின் தளையில் – கட்டில் – இருந்து அவர் தம்மை விடுவிக்காத வரை, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட்ட எந்த விடயத்திலும் அவர் சுயாதீனமாக – சுதந்திரமாக – நீதி, நியாயமாக – சிந்தித்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மாட்டார், எடுக்க முடியாது என்று கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில்தான், தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு உட்பட பல விடயங்கள் குறித்துப் பேசுவதற்கு தமக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு சிறுபான்மையினரான தமிழர்களின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி அவரிடம் எழுத்து மூலம் கோரியிருந்தது. அத்தகைய கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்டது. இன்னமும் அதற்கான கடிதம் கிடைத்தது என்ற பதில் கூட தராமல் அவரது ஜனாதிபதி செயலகம் 'கள்ள மௌனம்' காக்கின்றது. கடிதம் எழுதிய தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இத்தகைய கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறோம், அதற்கு இன்னும் நீங்கள் பதில் கூடத் தரவில்லை என்ற நினைவூட்டல் கடிதத்தையும் அனுப்பி, வாரங்கள் கடந்து விட்டன. ஆனால் எதுவும் நடப்பதாக இல்லை.

இப்படித் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு எழுத்து மூலம் கோரிக்கை கடிதத்தை முன்வைத்த சமயத்தில், அமெரிக்காவில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி அங்கு சென்றிருந்தார்.

அவர் நாடு திரும்பியதும் தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுப்பார் என்று யாழ்ப்பாணத்தில் அதிகம் அரசியல் செய்ய விழையும் அமைச்சர் சந்திரசேகரன் அந்தச் சமயத்தில் அறிவித்திருந்தார்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் கோரிக்கைக் கடிதம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அமைதி காக்கின்றது என்றால் அதே போன்ற கள்ள மௌனத்தைத்தான் அமைச்சர் சந்திரசேகரனும் பேணுகின்றார்.

தமிழரசுக் கட்சியைச் சந்தித்தால் அவர்களின் வலியுறுத்தல்களுக்கு – அவர்கள் முன்வைக்கும் நியாயங்களுக்கு – பதிலளிக்க வேண்டும். அப்படிப் பதில் அளித்தால், அது வெளியாகி ஜே.வி.பி. அரசியல் குழுக் கூட்டத்தில் தமக்கு நெருக்குவாரத்தையும் அழுத்தத்தையும் உருவாக்கிவிடும் என்று கருதும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, நமக்கு ஏன் வீண் வம்பு என்று தமிழரசுக் கட்சியின் கோரிக்கைக்கு பதில் தராமல் இழுத்தடிக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

ஆனால் இப்படி பதில் தராமல் இழுத்தடிப்பது, தீர்வுக்கான தீர்க்கமான முயற்சிகளை எடுக்காமல் காலத்தைப் பின்போடுவது, தேர்தலுக்கு முந்திய தமது பிரதான தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதியான அரசமைப்பு மாற்றம் போன்ற விடயங்களை கூட தமது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதிக்கு என்று ஒத்திப்போட்டு நாடகமாடுவது போன்றவை எல்லாம் இதற்கு முந்தைய நாட்டுத் தலைவர்களில் இருந்து தாமும் வேறுபட்டவர் அல்லர் என்பதை அநுரகுமார திஸநாயக்கவும் நிரூபிக்கின்றார் என்ற கருத்தைத்தான் தந்து நிற்கின்றன.

எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான். யானை என்றால் என்ன, மொட்டு என்றால் என்ன, கை என்றால் என்ன, கதிரை என்றால் என்ன, அன்னம், காஸ் சிலிண்டர், திசைகாட்டி என்றால் என்ன, எல்லாமே பேரினவாத மேலாதிக்கச் சிறையில் – சிந்தனையில் – இருந்து வெளியே வர முடியாத தொடை நடுங்கிக் கட்சிகள்தான்....!

---

## சிறை செல்ல நான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கு முன்னர் என்னைக் கைது செய்து இரண்டு வாரங்களேனும் சிறையில் அடைக்க அரசு முயற்சிக்கின்றது. என்னைக் கைது செய்வதற்கு இந்த அரசு ஐந்து தடவைகள் முயற்சித்துத் தோல்வியடைந்தது. இந்தத் தடவையும் முயற்சிக்கின்றது. இந்தத் தடவை சிறை செல்வதற்கு நானும் தயாராகவுள்ளேன்."

– இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"அரச சார்பற்ற நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஊடாக எனக்கு எதிராக முறைப்பாடளித்து, சாட்சியம் திரட்டும் நடவடிக்கைகளை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்ட முறைமை குறித்து நான் ஊடகங்களுக்கு வெளிப்படுத்திய விடயங்களினால் பணிப்பாளர் நாயகத்தின் புகழுக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசமைப்பின் 125 ஆவது பிரிவின் பிரகாரம் நான் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முறைப்பாடளித்தவரைக் காட்டிலும், முறைப்பாட்டைப் பதிவு செய்த உத்தியோகத்தருக்கே இந்த முறைப்பாடு குறித்து அதிக அக்கறை காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகம், மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயம் உட்பட அரச நிறுவனங்களில் எமது ஆதரவாளர்கள் இருப்பதைப் போன்று இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிலும் எமது ஆட்கள் உள்ளார்கள். நடப்பவற்றை எமக்குக் குறிப்பிடுவார்கள்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு மாதவ தென்னக்கோனுக்கு முழுமையான தகுதி காணப்பட்ட நிலையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க ஆகியோரின் தலையீட்டினால் தான் தெரிவில் இரண்டாம் நிலையில் இருந்த ரங்க திஸாநாயக்க பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் முறைகேடானது என்பதைச் சாட்சியங்களுடன் வெளிப்படுத்தினேன்.

வதந்திகளை அடிப்படையாகக் கொண்டு நான் இவற்றைக் குறிப்பிடவில்லை. உயர்நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட சத்தியபிரமாண கூற்றை அடிப்படையாகக் கொண்டே இவற்றை குறிப்பிட்டேன். மோசடியாள முறையில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின்பணிப்பாளர்நாயகம்அந்தப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அதை விட பாரதூரமான மோசடி பிறிதொன்றும் கிடையாது.

தவறைத் திருத்திக் கொள்வதற்கு அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக எம்மைப் பழிவாங்க முயற்சிக்கின்றது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பேரணி எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி நுகேகொடயில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் என்னைக் கைது செய்து இரண்டு வாரங்களேனும் சிறையில் அடைக்க அரசு முயற்சிக்கின்றது. என்னைக் கைது செய்வதற்கு இந்த அரசு ஐந்து தடவைகள் முயற்சித்துத் தோல்வியடைந்தது.

## சிறை செல்ல நான்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தடவையும் முயற்சிக்கின்றது. இந்தத் தடவை சிறை செல்வதற்கு நானும் தயாராகவுள்ளேன்.

பொலிஸ் உயர் அதிகாரிகளிடமிருந்து புலனாய்வுத் தகவல்களைப் பெறும் யூடியுபர் ஒருவர் மாதம் இலட்சக்கணக்கில் உழைக்கின்றார். எனக்கு சேறு பூசும் பொறுப்பை அரசு இந்த நபரிடம் ஒப்படைத்துள்ளது. உழைக்கும் பணத்தை இவர் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வேன்." – என்றார்.

## கூட்டாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை – சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று கடந்த செப்டெம்பர் மாதம் 14 – 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றது.

அந்தச் செயலமர்வில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, பிரதி அமைச்சர் முனீர் முளப்பர், நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம ஹெட்டியராச்சி, நிலாந்தி கொட்டஹச்சி, சமன்மலி குணசிங்க ஆகியோரும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவலவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரனும், மக்கள் விடுதலை முன்னிணியின் உறுப்பினர் டபிள்யூ.ரி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கான ஒருங்கிணைப்புச் செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் கலந்துகொண்டனர்.

இந்தச் செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி (சமஷ்டி) முறைமையை ஆழமாகப் புரிந்துகொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன் இதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அதேவேளை, இந்தச் செயலமர்வின் ஓரங்கமாக நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைத்த தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்க, 2015 – 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவு மீளக்கொண்டுவரப்படும் எனவும், அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் என அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை வாசித்து ஆராயும் பணிகள் முடிவுறும் தருவாயில் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் செயலமர்வு தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ட்டின் அழைப்பின் பேரில் நேற்று புதன்கிழமை கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுடன் நடைபெற்ற சந்திப்பின்போது மேற்படி செயலமர்வு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி இலங்கையில் கூட்டாட்சி முறைமையை (சமஷ்டி) அறிமுகப்படுத்துவது குறித்து தமிழ்க்கட்சிகளுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகச் செயலமர்வில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கூறினார்கள் என்று தூதுவர் சிறி வோல்ற் சுமந்திரனிடம் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரியுள்ள போதிலும், அதற்கு இன்னமும் பதில் கிட்டவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் இது குறித்து சுவிட்ஸர்லாந்தில் நடாத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் பற்றிச் சிந்திக்காமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

நிறைவேற்று அதிகார

ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய முக்கிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது." – என்றார்.

## பாதாளக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தற்போதைய அமைச்சர்களும், ஆளுந்தரப்பு எம்.பி.க்களும் தேர்தலுக்கு முன்னர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். அதனைக் கூறியே ஆட்சியையும் கைப்பற்றினர். எதிர்க்கட்சியினருக்குத் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கற்பிப்பதாகவும் கூறினர். ஆனால், இவர்கள் ஆட்சியமைத்ததன் பின்னர் தேசிய பாதுகாப்பு எந்த நிலையிலிருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

அன்றாடம் இடம்பெற்று வரும் துப்பாக்கிச்சூடுகளால் மக்களின் உயிருக்கு எந்தளவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். கடந்த ஒரு வருடத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளதோடு, 56 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக பிரதேச சபை தவிசாளர் ஒருவர் தனது அலுவலகத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அதற்கு முன்னர் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குள் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தளவுக்குப் பாதுகாப்பற்ற சூழல் நாட்டில் ஏற்படவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிக்கு என்ன ஆனது? எங்கு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டாலும் அது பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையது எனக் கூறி விடுகின்றனர்.

உண்மையிலேயே அந்தச் சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவையாகக் காணப்பட்டாலும், அதற்கான பொறுப்பு கூறலில் இருந்து அரசால் விலக முடியாது. எனவே, குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருப்பதை விடுத்து, இனி வரும் காலங்களை இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம். குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய எவரையும் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கக் கூடாது.

குறிப்பாக இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் எந்தவொரு பொலிஸ்மா அதிபரும் இந்தளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டவராக இருக்கவில்லை.

அரச அதிகாரியான அவருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட ரீதியில் அரசைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக உறுதியாகியுள்ளது. அதற்கு காரணம் பாதாள உலகக் குழுவினருடனான தொடர்பு என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு கூறுவதைப் போலவே பொலிஸ்மா அதிபரும் எதிர்க்கட்சியினருக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் ஜே.வி.பி.யின் பெலவத்த அலுவலகத்துக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட மேலும் பல மக்கள் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பக்கச்சார்பான நடவடிக்கைகளுக்கு அரசு நிச்சயம் பதிலளிக்க வேண்டும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதைப் பாதிப்பு

போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது தொடர்பான தேசிய பாடசாலை ஒன்றின் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க அங்கு தெரிவித்த ஒரு கருத்து தேசிய மட்டத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இரண்டு லட்சத்து முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி இருக்கின்றனர் என அங்கு அவர் தெரிவித்த கருத்துகளே பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

சுமார் நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் கொழும்பு மாவட்டத்தில் 2 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி இருக்கிறார்கள் என்ற கூற்று நம்ப முடியாததாகவும் மிகுந்த கவலையை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது. இது எந்தத் தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட புள்ளிவிவரம் என்பது தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் தெளிவுபடுத்தவில்லை.

ஆயினும், இலங்கையில் ஆபத்தான போதைப் பொருள்கள் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரசபை போதைப்பொருள்களுக்கு அடிமையான பாடசாலை மாணவர்களில் எண்ணிக்கையில் அதிகமானோர் மேல் மாகாணத்தில்தான் இருக்கின்றனர் எனவும், கொழும்பு மாவட்டத்தில் இது அதிகம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனினும், அந்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 30 ஆயிரம் அளவுக்கு இருக்குமா என்பது தொடர்பில் பலதரப்புகளும் சந்தேகம் தெரிவித்தாலும், கொழும்பு மாவட்ட மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் போதைப்பொருள் பாவனைக்கு இலக்காகி இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே கொழும்பு மாவட்டத்தில் அதிகம் என்பதும், அவர்களே இந்தப் பாதிப்புக்கு அதிகம் இலக்காகும் வாய்ப்பு உள்ள நலிவுற்ற தரப்பினர் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதே நேரத்தில் இந்த மாணவர்கள் 'போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள்' என்ற சொல்லாடலின் மூலம் சிறைச்சாலை ஆணையாளர் குறிக்க முற்படுகின்ற விடயம் என்ன என்பதும் கவனிக்கப்பட வேண்டியது தான். அவ்வப்போது பாவிப்போரா அல்லது விலக முடியாதவாறு அடிமைப்பட்டுப் போனோரா என்ற கேள்விகள் எழுகின்றன.

சாதாரண சிகரெட், வெற்றிலை, பியர், மது போன்ற போதைப் பொருள்களைப் பயன்படுத்துவோரையா அல்லது கஞ்சா, போதைப் பாக்கு போன்றவற்றை உபயோகிப்போரையா அல்லது அதற்கு மேல் ஐஸ், ஹெரோயின், ஹஷ்கிஷ், மர்ஜூவானா போன்ற சிந்தெட்டிக் ரக போதைப் பொருள்கள், ஊசிகள் போன்றவற்றினால் உள்ளெடுக்கப்படுபவை, போதை மாத்திரைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி, அவற்றுக்கு அடிமையாகி, அதிலிருந்து மீள முடியாத தரப்பினரையா சிறைச்சாலை ஆணையாளர் குறிப்பிடும் எண்ணிக்கை குறிக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது.

எது, எப்படியாயினும் அவர் விடுத்துள்ள எச்சரிக்கை விரைந்து கவனிக்க வேண்டிய அவசர - அவசிய - விவகாரம் என்பது முக்கியம். இதில் அசிரத்தை காட்டுவோமானால் விளைவுகள் விபரீதமாகும்.

# த.வெ.கவிற்கு நேரில் சென்று அழைப்பு விடுத்தது தி.மு.க.



2026 சட்டமன்ற தேர்தலை குறி வைத்து களமிறங்கிய விஜய், ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை பிரச்சாரம் மேற்கொண்டு வந்தார்.

கரூரில் நடைபெற்ற தவெக தலைவர் விஜய்யின் தேர்தல் பிரச்சாரத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த விடயம் கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

அத்தோடு பிரச்சாரத்தை நிறுத்திய விஜய் அதன் பின்னர் வெளியே வரவில்லை. கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த், இணைப் பொதுச்செயலாளர் சி.டி.நிர்மல் குமார் ஆகியோர் மீது வழக்கு இருந்ததால் அவர்கள் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அவர்களும் தலைமறைவாக இருந்தனர்.

இதனால் கட்சியின் செயல்பாடு மொத்தமாக முடங்கி இருந்தது. இரு நாட்களுக்கு முன்னர், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை விஜய் சந்தித்து ஆறுதல் கூறினார். தற்போது, மீண்டும் தீவிர அரசியலுக்குள் விஜய் இறங்க உள்ளார்.

எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் அடுத்த கட்ட தொடர் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க, சிறப்பு பொதுக்குழுவை கூட்டுவதாக அறிவித்துள்ளார்.

இதன் பின்னர், விஜய்யின் பிரச்சார பயணத்திட்டம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்டமாக சிறப்பு வாக்காளர் திருத்தப் பட்டியல் பணிக்கான அறிவிப்பை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் என்ற பெயரில் தமிழக மக்களின் வாக்குரிமையை பறிக்கும் சதி திட்டமாக தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கருதுகின்றன.

இதனை எதிர்கொள்வது குறித்து விவாதிக்க, எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி அனைத்து கட்சி கூட்டத்திற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

தி.மு.க. சார்பில் வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், பனையூரில் உள்ள த.வெ.க தலைமை அலுவலகம் வந்து பொதுச்செயலாளர் ஆனந்திடம் நேரில் அழைப்பு விடுத்துள்ளார்.

# ரஃபேல் போர் விமானத்தில் பயணித்த இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு



இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்ததன் மூலம் வரலாறு படைத்துள்ளார்.

ஒரு இந்திய ஜனாதிபதி ரஃபேல் போர் விமானத்தில் பயணிப்பது இதுவே முதல் முறையாகும்.

ஹரியானாவில் உள்ள அம்பாலா விமானப்படைத் தளத்தில் இருந்து அவர் ரஃபேல் போர் விமானத்தில் புறப்பட்டார்.

இது ஜனாதிபதி முர்மு, போர் விமானத்தில் மேற்கொள்ளும் இரண்டாவது பயணமாகும்.

இதற்கு முன்னர், அவர் 2023 ஏப்ரல் 8 அன்று அசாமின் தேஜ்பூர் விமானப்படைத் தளத்தில் இருந்து சுகோய்-30 ஏ.பி.ஜே. ஜெட் விமானத்தில் பறந்தார்.

இந்திய ஆயுதப் படைகளின் உச்ச தளபதியாக இருக்கும் ஜனாதிபதி, நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஆயுதப்படைகளுடனான நெருங்கிய தொடர்பை வலியுறுத்தும் விதமாக இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் மற்றும் பிரதிபா பாட்டீல் ஆகியோர் சுகோய்-30 எம்.கே.ஐ. போர் விமானங்களில் பயணம் செய்திருக்கின்றனர்.

இதனால், சுகோய்-30 எம்.கே.ஐ. போர் விமானத்தில் பறந்த மூன்றாவது ஜனாதிபதி மற்றும் இரண்டாவது பெண் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஆவார்.








# காசாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் 46 சிறுவர்கள் உட்பட 104 பேர் மரணம்

காசாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் 46 சிறுவர்கள், உட்பட 104 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், 253 பேர் காயமடைந்துள்ளனர்., மருத்துவமனைகளில் போதிய மருந்து பொருள்களின் இருப்பு இல்லாதமையினால், பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

போர்நிறுத்தம் ஒப்பந்தம் அமுலில் உள்ள சூழலில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால், காசாவுக்குள் திரும்பி வந்த பொதுமக்களிடையே அச்சமும், பதற்றமும் அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் காசா இடையே கடந்த 10 ஆம் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்று கொள்ளப்பட்டது.

எனினும், போர் நிறுத்தத்தை ஹமாஸ் மீறியதாக தெரிவித்து, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 211 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 597 பேர் காயமடைந்துள்ளனர்.

# காசா மீதான இஸ்ரேல் தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்தது




காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலைக் கண்டித்த ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், அமைதிக்கான வாய்ப்பையும், மிகவும் நீதியான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கிய பாதையையும் வீணாக்க வேண்டாம் என்று சர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு டர்க் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் இஸ்ரேல் தனது கடமைகளுக்கு இணங்க வேண்டும் என்றும், எந்தவொரு மீறல்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் வன்முறைத் தாக்குதல் முடிவுக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கையுள்ள நிலையில், இந்த தாக்குதல்கள் நிகழ்ந்தமை வருத்தமளிக்கிறது, என்று அவர் கூறினார்.

போரில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் நல்லெண்ணத்துடன் செயல்பட்டு போர் நிறுத்தத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.



# யோஷித – டேய்ஷிக்கும் எதிரான நிதி தூய்தாக்கல் வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் யோஷிதவின் பாட்டியான டேய்ஷி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக, நிதித்தூய்தாக்கல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்குடன் தொடர்புடைய ஆவணங்களும் பிரதிவாதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால், விசாரணைக்கான திகதியை அறிவிக்க முடியும் என பிரதிமன்றாடியார் நாயகம் ஜனக பண்டார குறிப்பிட்டுள்ளார்.

வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி, அது தொடர்பான தமது தரப்பு சமர்ப்பணங்களை விரைவில் நீதிமன்றில் முன்வைக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் மூன்று தனியார் வங்கிகளில் 59 மில்லியன் ரூபாய்க்கும், அதிக பணத்தை வைப்பிலிட்டமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# அஸ்வெசும இரண்டாம் கட்ட பயனாளிகள் வங்கிக் கணக்கு திறக்குமாறு அறிவுறுத்தல்




அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு தகுதிபெற்றும் இதுவரை வங்கிக் கணக்கு திறக்காத பயனாளிகள் விரைவா வங்கி கணக்கை திறந்து அது தொடர்பான தகவல்களை பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு வழங்க வேண்டும் என நலனோன்பு பயனாளிகள் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி சபை விடுத்துள்ள அறிக்கையில்,

“அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்காக தகுதிபெற்ற பயனாளிகளின் பெயர் பட்டியல் பிரதேச செயலாளர் காரியாலயங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அஸ்வெசும நலத்திட்ட உதவிகள் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காக தெரிவாகி, இதுவரை வங்கி கணக்கொன்று திறக்காமல் இருக்கும் பயனாளிகள், தங்களுக்கு உரித்தான பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு சென்று, வங்கி கணக்கொன்றை திறப்பதற்குரிய கடிதத்தை பெற்றுக்கொண்டு, அந்த கடிதத்தை மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி. இலங்கை வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்களில் தங்களுக்கு வசதியான வங்கி கிளை ஒன்றுக்கு சமர்ப்பித்து, அஸ்வெசும நலத்திட்ட பயனாளிகள் வங்கி கணக்கொன்றை திறக்க வேண்டும்.

அதன் பிரகாரம் இதுவரை வங்கிக் கணக்கு திறக்காத அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு தகுதிபெற்ற பயனாளிகள் மிக விரைவாக இந்த வங்கி கணக்கை திறந்து, குறித்த வங்கி கணக்கு தகவல்களை பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு வழங்க வேண்டும்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வட மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை சனியன்று

## அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்களை உடனடியாக தொடர்புகொள்ளுமாறு ஆணைக்குழு செயலர் வேண்டுகோள்



வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை (01.11.2025) வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது எனவும், அதற்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்களைத் தொடர்புகொள்ளுமாறும் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய சகல பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதிஅட்டைகள்கிடைக்கப்பெறாதவிண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரியுடனோ அல்லது 021-221 9939 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

அத்துடன் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டையுடன் பிரவேசிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசுக்கு எதிராக போராட வாருங்கள்

## சஜித் அணிக்கு மொட்டுக் கட்சி அழைப்பு




நுகேகொடையில் எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்படி அழைப்பை விடுத்துள்ளார்.

நுகேகொடை கூட்டத்தில் தமது கட்சி பங்கேற்காது எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையிலேயே, மொட்டுக் கட்சி தரப்பில் இருந்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். இது தனி நபர்களைப் பிரசாரப்படுத்தும் கூட்டம் அல்ல. எனவே, இதில் பங்கேற்பதால் கட்சிகளின் தனித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படாது." - என்றும் ஜானக வக்கும்புர மேலும் தெரிவித்துள்ளார்.

# அச்சுவேலியில் கசிப்புடன் பெண்ணொருவர் கைது!


யாழ். அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீர்வேலி மேற்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் 36 வயதுடையவர் என்றும், அவருடைய உடமையில் இருந்து 5 லீற்றர் கசிப்பும், 20 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்தியாவுக்கான அனைத்து விசா செயற்பாடுகளையும் நேரடியாக கையாளவுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம்




இந்தியாவுக்கான அனைத்து விசா செயற்பாடுகளையும், எதிர்வரும் நவம்பர் 03 ஆம் திகதி முதல் இந்திய உயர்ஸ்தானிகரகம் நேரடியாக கையாளவுள்ளது.

அதன்படி தற்போது இந்திய விசாக்களை பெற்றுக் கொடுக்கும் வெளிப்புற சேவை வழங்குநரான ஐ.வி.எஸ். லங்கா நிறுவனத்தின் சேவைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.

இந்த சேவை வழங்குநருடனான ஒப்பந்த காலம் நிறைவடைவதால், தற்காலிக ஏற்பாடாக இந்திய உயர்ஸ்தானிகரகம் மற்றும் கிளை அலுவலகங்களில் நேரடியாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து விசாக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 03 ஆம் திகதி திங்கள் கிழமை முதல் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் மற்றும் கண்டியிலுள்ள உதவி உயர்ஸ்தானிகரகம் ஊடாக அனைத்து விதமான விசா மற்றும் உயர்ஸ்தானிகரக சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீதித்துறையை அவமதித்த நிலந்தி கொட்டஹச்சி ஒரு சட்டத்தரணியா என்பதில் சந்தேகம் உள்ளது

## உதய கம்மன்பில தெரிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி நீதித்துறையை அவமதித்துள்ளதால், அவர் ஒரு சட்டத்தரணியா என்பதில் சில சந்தேகங்கள் உள்ளன எனவும் அவர் ஒரு சட்டத்தரணி என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் சட்டத்தரணி என்பதற்கான சான்றிதழை பகிரங்கப்படுத்துமாறு உதய கம்பன்பில கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டு அவர் இதனைக் கூறினார்.

எதிர்க்கட்சிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கவே ஒன்றிணைவதாக நேற்று நிலந்தி கொட்டஹச்சி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார் என கம்மன்பில குறிப்பிட்டார். இதுதொடர்பில் உதய கம்மன்பில மேலும் தெரிவிக்கையில்,

"சட்டத்தின் ஆட்சி நீதித்துறையால் செயல்படுத்தப்படுகிறது, ஒருவர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்தால், நீதித்துறை அவருக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று அர்த்தம்.

இது நீதித்துறைக்கு நேரடி அவமானம். எதிர்க்கட்சி தனது அதிகாரத்தைக் காட்டும் போது நீதித்துறை பயப்படுகிறது. அதாவது நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கையைக் குறை மதிப்புக்கு உட்படுத்துவதாகும்.

நீதித்துறையின் மீதான மரியாதையை அழிப்பது. இது 2024 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் இல. 8 இன் அப்பட்டமான மீறலாகும்.

அந்தச் சட்டத்தின் பிரிவு 3 இன் படி, ஒரு நீதித்துறை நிறுவனத்தை அவமதிப்பது அல்லது குறைத்து மதிப்பிடுவது நீதிமன்ற அவமதிப்பாகும். இது ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாகும்.

நீதிமன்ற அதிகாரியாகக் கருதப்படும் ஒரு சட்டத்தரணி இந்தக் கூற்றை வெளியிடும்போது, அது ஒரு சாதாரண நபர் செய்வதை விட நீதிமன்றத்துக்கு மிகவும் கடுமையான அவமானமாகும்.

ஒரு சட்டத்தரணி நீதிமன்ற அதிகாரியாகக் கருதப்படுவதால், சமூகம் ஒரு சட்டத்தரணியை நீதிமன்றத்தின் உள் நடவடிக்கைகளில் நன்கு அறிந்தவராகக் கருதுகிறது.

எனவே, எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டால், எதிர்க்கட்சிக்கு எதிராக சட்டம் செயல்படுத்தப்படாது என்ற கருத்தை சமூகத்தில் விதைக்க கொட்டஹச்சி முயற்சிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்திக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தடுக்க, அவர் உண்மையில் என்ன கூற வந்தார் என்பது குறித்து அவர் ஒரு பொது அறிக்கையை வெளியிட வேண்டும்.

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டால், நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தாது, என்று அதிர்ச்சியூட்டும் தகவலைக் கூறியுள்ளார்.

எனவே, தேசிய மக்கள் சக்தியினர், நீதிமன்றத்தின் கௌரவத்தை மேலும் கெடுக்க அனுமதிக்க முடியாது. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் சட்டக் கல்லூரிகளில் கற்பிக்கப்படுகிறது.

அந்த அடிப்படை கற்பித்தல் கூட தெரியாவிட்டால், நிலந்தி தன்னை ஒரு சட்டத்தரணி என்று கூறிக் கொள்வதில் எங்களுக்கு சந்தேகம் உள்ளது.

கடந்த காலத்தில், ஏராளமான தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள் போலி பதவிகளை காட்டி தேர்தலில் போட்டியிட்டமை நாம் யாவரும் அறிந்த விடயமே. அதற்கு சிறந்த உதாரணம் முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல. நிலந்தி கொட்டஹச்சி அசோக ரன்வலவின் பெண் அவதாரம் அல்ல என்பது யாருக்குத் தெரியும்.

அவ்வாறு இல்லை என நிரூபிக்க விரும்பினால், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படும் சட்டத்தரணிக்கான சான்றிதழை கொட்டஹச்சி வெளிப்படுத்த வேண்டும்." என்றார்.

# யாழ்.பல்கலையில் நீண்டகாலம் பணிபுரிந்தோரை கௌரவிப்புச் செய்வதற்கு திரும்பவும் கோரிக்கை


பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
UNIVERSITY EMPLOYEES UNION


பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
UNIVERSITY EMPLOYEES UNION


பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
UNIVERSITY EMPLOYEES UNION

பல்கலைக்கழக சேவையில் 25 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக திருப்திகரமான மற்றும் தொடர்ச்சியான சேவையாற்றிய (போதனை சார்/சாரா) ஊழியர்களுக்கு, பல்கலைக்கழக அமைப்பே வருடந்தோறும் சிறப்பான கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டும் என யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் –

2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் 04ஆம் திகதியிட்ட (இல. UEU/37 Ex. Co/099) கடிதத்தின் தொடர்ச்சியாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றுநிருபம் இலக்கம் 696 இன் படி, நீண்டகால சேவையாற்றிய ஊழியர்களுக்கான 'சேவை கௌரவ விருது' வழங்கும் நடைமுறையை பல்கலைக் கழகமே மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா பல்கலைக் கழகத்திலும் இதற்கான நிகழ்வு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த 'ஊழியர் தின விழா – 2025' அக்டோபர் 15ஆம் திகதி மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் துணைவேந்தர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றதை சுட்டிக்காட்டிய சங்கம், 'இந்நிகழ்வைப் பல்கலைக்கழகமே அதிகாரப்பூர்வமாக ஏற்பாடு செய்து, ஆண்டு விழாவாக நிலைநிறுத்துவது ஊழியர்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பு' எனக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நிகழ்வை ஆவணப்படுத்துவதற்கான அனுமதி வழங்கலில் ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது. ஊடகப்பிரிவு கருவிகளைப் பயன்படுத்துவதற்கு துணைவேந்தர் வழங்கிய அனுமதியையும் மீறி சிலர் தடையிட்டதை 'நிர்வாகத் தவறாக' சுட்டிக்காட்டி, இனி இத்தகைய நிகழ்வுகளின் போதும் ஊடகப்பிரிவு சுதந்திரமாக பங்குபெறுவதற்கான உறுதியான அனுமதி வழங்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளது.

மேலும், இந்நிகழ்விற்கான செலவின் ஒரு பகுதியை பல்கலைக்கழக நிதியிலிருந்தே வழங்கி உதவுமாறு சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் மற்றும் இணைச் செயலாளர்கள் கையொப்பமிட்டுள்ள இக்கடிதம், "பல்கலைக்கழக சமூகத்தின் ஓர் அங்கமாகிய ஆசிரியர், மாணவர் மற்றும் ஊழியர் சங்கங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இத்தகைய கௌரவிப்பு நிகழ்வுகள் பல்கலைக் கழகத்தின் பிரதான நிகழ்வாக அமைந்திட வேண்டும்" என முடிவுறுகிறது.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் மதன்

(பாறுக் ஷிஹான்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் எவ்.பி.மதன் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையை அறிக்கை செய்து, புதிய சேவை நிலையத்துக்குரிய கடிதத்தினையும் பெற்றுக்கொண்டார்.



திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய வைத்தியர் ஏ.பி. மசூத் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளராக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டமையையடுத்து வைத்தியர் எப்.பி.மதன் திருக்கோவில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியர் மசூத் திருக்கோவில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவ்வைத்தியசாலை அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்புக்களை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 'இன்று சேமி - நாளை சுகமாக வாழ்'
# உலக சிக்கன நாளுக்கான சிந்தனை

**நாளை - ஒக்டோபர் 31ஆம் திகதி - உலகம் முழுவதும் உலக சிக்கன நாள் (World Thrift Day) கொண்டாடப்படுகிறது. எனினும் இந்தியா போன்ற சில நாடுகளில் இன்றே - ஒக்டோபர் 30 ஆம் திகதியே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

மனித வாழ்வில் சிக்கனம் என்பது மிக முக்கிய மான நற்பண்பாகும். சிக்கனம் என்பது வெறும் பணம் சேமிப்பது மட்டுமல்ல, அது நம் வாழ்வை சீராகவும், சுயநிலையாகவும் அமைக்கும் ஒரு வாழ்க்கை முறை ஆகும். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பணம், நேரம், ஆற்றல், மற்றும் இயற்கை வளங்களை நுட்பமாகச் செலவழிக்கக் கற்றுக் கொள்வது மிக அவசியம். இதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 31ஆம் திகதி உலகம் முழுவதும் உலக சிக்கன நாள் (World Thrift Day) எனக் கொண்டாடப் படுகிறது.

### உலக சிக்கன நாளின் வரலாறு

உலக சிக்கன நாள், 1924 ஆம் ஆண்டு இத்தாலியின் மிலான் நகரில் நடைபெற்ற சர்வதேச சேமிப்பு வங்கி மாநாட்டில் அறிமுகமாகியது. இம்மாநாட்டில் உலகின் பல சேமிப்பு வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பிலிப்போ ரவிசா என்ற பேராசிரியர், அக்டோபர் 30 ஆம் நாளை 'சர்வதேச சிக்கன நாள்' என அறிவித்தார். இதன் மூலம், சேமிப்பு மற்றும் சிக்கனத்தின் முக்கியத் துவத்தை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்பதே இந்த நாளின் நோக்கம் ஆகும்.

### சிக்கனத்தின் பொருள், அர்த்தம்

'சிக்கனம்' என்ற சொல் தமிழ் வழக்கில் 'சிந்தனையுடன் செலவிடுதல்' என்று பொருள்படும். நம் தேவைகளையும் ஆசைகளையும் பிரித்தறிந்து, தேவையானவற்றிற்கே செலவு செய்து, மீதியை சேமிப்பது சிக்கனத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். ஒருவர் சிக்கனமாக நடக்கிறார் என்றால், அவர் தன் வருமானத்திற்குள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார் என்பதைக் குறிக்கும். இது வெறும்



நாகராசா தனுஸ்காந்
(ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பணச் சேமிப்பை மட்டுமல்ல மின்சாரம், நீர், உணவு, நேரம் மற்றும் சுற்றுச்சூழல் வளங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்துவது அதில் அடங்கும்.

### சிக்கனத்தின் வரலாற்று அவசியம்

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகம் பல பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தது. குறிப்பாக முதல் உலகப் போருக்குப் பிறகு, மக்கள் பணத்தை மிகுந்த அளவில் வீணடித்து வறுமையில் சிக்கினர். இதனால் பல குடும்பங்கள் பொருளாதார தளர்ச்சியை எதிர்கொண்டன. இந்தச் சூழ்நிலையில் சேமிப்பின் அவசியம் உலகளவில் உணரப்பட்டது. அதனால்தான் வங்கிகள், அரசுகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இணைந்து மக்கள் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கும் நோக்கில் உலக சிக்கன நாளை உருவாக்கின.

### சிக்கனத்தின் முக்கியத்துவம்

சிக்கனம் மனித வாழ்வில் பல நன்மைகளை

தொடர்ச்சி▼



# ‘இன்று சேமி – நாளை சுகமாக வாழ்’ உலக சிக்கன நாளுக்கான சிந்தனை

தொடர்ச்சி▲

அளிக்கிறது. அது நம்மை எதிர்காலத்திற்குத் தயார் செய்கிறது. திடீர் நிதி நெருக்கடி, நோய், வேலை இழப்பு போன்ற சூழ்நிலைகளில் சிக்கனம் நம்மைக் காப்பாற்றுகிறது. மேலும், சிக்கனமான வாழ்க்கை முறையால் நாம் வீணாக்கத்தைத் தவிர்க்கலாம். இது நம் தனிநபர் வளர்ச்சிக்கும், குடும்ப நலத்திற்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஆதாரமாகிறது. ஒவ்வொரு நபரும் தன் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்து வங்கிகளில் அல்லது நம்பகமான முதலீட்டு திட்டங்களில் வைப்பது அவசியம்.

உதாரணமாக, கொவிட்-19 காலத்தில் இலங்கையில் பல குடும்பங்கள் வேலை இழந்தபோதும், வங்கிகளில் சிறு சேமிப்புகள் வைத்திருந்தவர்கள் தங்களது குடும்பத்தைக் காப்பாற்ற முடிந்தது. இது சிக்கனத்தின் முக்கியத்துவத்தை நேரடியாக உணர்த்திய ஒரு நிகழ்வாகும்.

### சிக்கனத்தின் வடிவங்கள்

சிக்கனத்தை பல வடிவங்களில் கடைபிடிக்கலாம். உதாரணமாக –

- பணச் சிக்கனம்: தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து, சிறு அளவில் பணம் சேமிப்பது.
- நேரச் சிக்கனம்: நேரத்தை வீணடிக்காமல் பயனுள்ளதாக பயன்படுத்துவது.
- ஆற்றல் சிக்கனம்: மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை தேவையான அளவில் மட்டுமே பயன்படுத்துவது.
- உணவுச் சிக்கனம்: உணவுப் பொருள்களை வீணாக்காமல், தேவைக்கு ஏற்ப மட்டுமே எடுத்துக்கொள்வது.

இவை அனைத்தும் சமூகத்திலும் சுற்றுச்சூழலிலும் சமநிலையை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, ‘Switch Off - Save Energy’ மற்றும் ‘Save Water for Tomorrow’ போன்ற பிரசாரங்கள் வீட்டில் மின்சாரம் மற்றும் நீர் வீணாவதை குறைக்கும் முயற்சிகளாகும்.

### வங்கிகள் மற்றும் சேமிப்பு திட்டங்கள்

வங்கிகள் உலக சிக்கனத்தின் முதன்மைத் தூணாக உள்ளன. மக்கள் தங்கள் பணத்தை வங்கியில் சேமிப்பதன் மூலம் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதுடன் வட்டி வருமானத்தையும் பெறுகின்றனர். மேலும், தபால் சேமிப்பு திட்டங்கள், சிறு சேமிப்பு குழுக்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவை மக்களை சேமிப்பில் ஈடுபடுத்துகின்றன. சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு பத்திரமாக பணத்தைச் சேமிக்கும் பழக்கம் கற்பிக்கப்பட வேண்டும்.

### இன்றைய சமுதாயத்தில் சிக்கனத்தின் அவசியம்

இன்றைய நவீன உலகில் மக்கள் உடனடி விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக கடன்கள், கிரெடிட் கார்டுகள் போன்றவற்றில் அதிகம் சார்ந்துள்ளனர். இது அவர்களை நிதி சிக்கல்களில் சிக்கவைக்கிறது. சிக்கனப் பழக்கம் இல்லாததால், பல குடும்பங்கள் பொருளாதார அழுத்தத்தையும் மனஅழுத்தத்தையும் எதிர்கொள்கின்றன. இதனைத் தவிர்க்க சிக்கனம் அவசியமாகிறது. “சம்பாதிப்பதை விட குறைவாக செலவிடு“ என்பது சிக்கனத்தின் பொன்மொழி ஆகும்.

### சுற்றுச்சூழல் மற்றும் சிக்கனம்

சிக்கனம் பொருளாதார துறையிலேயே மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் முக்கிய பங்களிப்பு அளிக்கிறது. நாம் மின்சாரம், நீர், எரிபொருள் போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்தினால், இயற்கை வளங்களின் வீணாக்கத்தைத் தவிர்க்கலாம். அதேபோல் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து, சுழற்சி (recycling) வழக்கத்தை வளர்ப்பது கூட சிக்கனத்தின் ஓர் வடிவமாகும்.

‘Reduce – Reuse – Recycle’ இதன் மூலம் மறுசுழற்சி செய்யப்படுகிறது, வீணாக்கம் குறைக்கப்படுகிறது. இது ஒரு சுற்றுச்சூழல் சிக்கனம் எனலாம்.

### சிக்கனமும் இளைய தலைமுறையும்

இன்றைய இளைய தலைமுறை வாழ்க்கை முறையில் சிக்கனத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் விளம்பரங்கள் பல தேவையற்ற பொரும்களுக்கான ஆசைகளை தூண்டுகின்றன. இதனால் இளம் தலைமுறை உடனடி திருப்தி நோக்கில் செலவழித்து வருகிறார்கள். அவர்களுக்கு நிதி கல்வி மற்றும் சிக்கனத்தின் பயன்களைக் கற்பிப்பது மிகவும் அவசியம். ‘இன்று சேமி – நாளை சுகமாக வாழ்’ என்ற கருத்தை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

### சிக்கனமும் தேசிய வளர்ச்சியும்

ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும் அதன் குடிமக்களின் சேமிப்பு வீதத்தின்மேல் சார்ந்துள்ளது. மக்கள் சேமிப்பின் மூலம் வங்கிகளில் முதலீடுகள் அதிகரிக்கின்றன் அதன்மூலம் தொழில்கள், வேலை

தொடர்ச்சி▼

# ‘இன்று சேமி – நாளை சுகமாக வாழ்’ உலக சிக்கன நாளுக்கான சிந்தனை

தொடர்ச்சி▲

வாய்ப்புகள், உற்பத்தி மற்றும் வளர்ச்சி ஏற்படு கின்றன. எனவே, சிக்கனம் என்பது தனிநபரின் நலனையும், நாட்டின் முன்னேற்றத்தையும் ஒருங்கே இணைக்கும் சக்தியாகும்.

இலங்கையின் 2023 பொருளாதார அறிக்கை படி, குடும்ப சேமிப்பின் வீதம் 22 வீதமாக உயர்ந் துள்ளது. இது நம்பிக்கைக்குரிய முன்னேற்ற மாகும். சிக்கனத்தின் மூலம் ஒரு நாடு கடன் சார்ந்த பொருளாதாரத்திலிருந்து விடுபட முடியும்.

## சிக்கனம் இன்மையால் ஏற்படும் தீமைகள்

நிதி நெருக்கடி : சிக்கனமின்மை மனிதனை முதலில் நிதி நெருக்கடியில் சிக்கவைக்கிறது. சம்பா-திக்கும் அளவுக்குக் கூடுதல் செலவு செய்வது, கடன் வாங்கி வாழ்வது, அல்லது ‘நாளை சம்பாதித்து விடலாம்’ என்ற எண்ணம், ஒருவரை வறுமைக்கு தள்ளும்.உதாரணம்:இலங்கையில் பல குடும்பங் கள் கடன் அட்டைகள் (Credit Cards) மற்றும் ‘பயன்படுத்து பிறகு செலுத்து’ (Buy Now Pay Later) முறையில் பொருள்களை வாங்குகின்றன. இதனால் வட்டி சேர்த்து கடன் அதிகரிக்கிறது. சேமிப்பு இல்லாததால், அவர்கள் திடீர் நிதி சிக்கல்களை சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர்.

எதிர்கால பாதுகாப்பின்மை: சிக்கனமில்லாத வாழ்க்கை, எதிர்கால நம்பிக்கையை அழிக்கிறது. திடீர் அவசரங்கள் –நோய், வேலை இழப்பு, இயற்கை பேரழிவு – போன்ற சமயங்களில் சேமிப்பு இல்லாத வர்கள் கடன் அல்லது உதவி கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கடன் வாழ்க்கை : சிக்கனமில்லாதவர் பெரும்பாலும் கடனில் வாழ்கிறார். கடன் எடுத்து பொருள்கள் வாங்குவது ஒரு பழக்கமாகி விடுகிறது. இதன் விளைவாக வட்டி அதிகரித்து, வருமானம் முழுவதும் கடன் செலுத்துவதற்கே செல்கிறது. இது நிதி சுதந்திரத்தை முழுமையாக அழிக்கிறது. இலங்கையில் சில இளம் தலைமுறை மக்கள் வங்கிக்



கடன் அல்லது “நயளலியலஅநவெ” முறைகளில் வாகனம் வாங்கி, அதற்காக மாத வருமானத்தின் பெரும் பகுதியை செலுத்துகின்றனர். இது அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் மனநலத்தையும் பாதிக் கிறது.

மனஅழுத்தம் மற்றும் கவலை : பணம் இல் லாமை அல்லது நிதி அழுத்தம், மனநலப் பிரச்சினை களின் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். சேமிப்பு இல்லாதவர்கள் எப்போதும் நிதிக் கவலைகளில் ஆழ்ந்திருப்பார்கள். இது குடும்ப உறவுகளிலும், வேலை திறனிலும் பாதிப்பை ஏற்படுத்தும். சிலர் கடன் சுமையால் மனஅழுத்தம் காரணமாக தற் கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதற்கான செய்திகளும் அடிக்கடி வெளிவருகின்றன. இது சிக்கனமின்மையின் தீவிர விளைவு.

சமூக மரியாதையின் இழப்பு : சிக்கனமில்லாத வாழ்க்கை ஒருவர் சமூகத்தில் மதிப்பை இழக்கச் செய்கிறது. கடன் வாங்கி செலுத்த முடியாமல் போனால், நண்பர்கள், உறவுகள், வங்கிகள் அனைத் தும் நம்பிக்கையை இழக்கின்றன. சமூகத்தில் ‘நம்பமுடியாதவர்’ என்ற பெயர் ஏற்படும்.

குடும்பத்திலும் பாதிப்பு : சிக்கனமின்மை குடும்ப வாழ்க்கையில் பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்தும். பண நெருக்கடி, குடும்பத்தினருக்கிடையேயான




வாக்குவாதம், கல்வி செலவுகளைச் சந்திக்க முடி யாமை போன்றவை ஏற்படுகின்றன.

நாட்டின் பொருளாதாரத்திலும் தாக்கம்: சிக்க னம் இல்லாத குடிமக்கள் கொண்ட நாடு நிலைத்த பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. மக்கள் சேமிக்காதபோது வங்கிகளுக்கு முதலீடு குறையும். இதனால் நாட்டின் வளர்ச்சிக்கும் பாதிப்பு ஏற்படும். இலங்கையின் 2022 பொருளாதார நெருக்கடியின் போது, வெளிநாட்டு கடன்களிலும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்திலும் நாட்டின் நம்பிக்கை அதிகம் இருந்தது. மக்களின் சேமிப்பு வீதம் குறைந்திருந்ததால், உள்ளூர் நிதி வலிமை பலவீனமடைந்தது. இது தேசிய அளவிலான சிக்கன இன்மையின் விளைவாகும்.

வாழ்க்கை இலக்குகள் நிறைவேறாமை: சிக்கனமின்மை ஒருவரின் வாழ்க்கை கனவுகளை நிறைவேற்றத் தடையாகிறது. வீடு, கல்வி, போன்ற இலக்குகள் அனைத்தும் சேமிப்பு இல்லாமல் சாத்தியமற்றதாகிவிடும்.

எனவே, சிக்கனமின்மை என்பது நிதிப் பிரச்சினை மட்டும் அல்ல் அது வாழ்க்கையின் ஒழுங்கின்மை யையும் குறிக்கிறது. ஒருவர் சம்பாதிப்பதை விடச் செலவிட்டால், அவரது எதிர்காலம் நிச்சயமாக சிக்கலாகிவிடும். சிக்கனம் நமக்கு மனநிம்மதி, பொருளாதார சுதந்திரம், சமூக மரியாதை ஆகிய வற்றை அளிக்கிறது. ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை யில் சிக்கனத்தை ஒரு நெறியாகக் கடைப்பிடிக்க வேண்டும். ‘சிறிது சேமிப்பு, பெரிய நம்பிக்கை’ என்பது வெறும் வாசகம் அல்ல – அது வாழ்க்கை நம்பிக்கையின் சின்னம்.

சிக்கனமில்லாத வாழ்க்கை தற்கால நிம்மதியைக் கொடுத்தாலும், நிரந்தர கவலையைக் கொடுக்கும்.

சிக்கனமான வாழ்க்கை சிறிதளவு தியாகத்தை கேட்கும் ஆனால் பெரும் நிம்மதியைத் தரும்.

# தேங்காய்ச் சிரட்டைகளுடன் வந்த லொறி விபத்தில் தடம் புரண்டது!









**(உடப்பு க.மகாதேவன்)**

நேற்று முன்தினம் குளியாப் பிட்டிய குருநாகல் வீதியில் ஹோரம் பாவ பகுதியில், நாரம்மல சந்தியில் குளியாப்பிட்டிய நோக்கி தேங்காய்ச் சிரட்டைகள் ஏற்றி வந்த லொறி முன்னே சென்ற மற்றொரு வாகனத்துடன் மோதித் தடம் புரண்டது.

இதில் இரண்டு பேருக்குப் படுகாயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உணவகம், வெதுப்பகம், வர்த்தக நிலையம் என மன்னாரில் 3 கடைகளுக்கு இந்த வாரத்தில் சீல்











**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபை எல்லைக்குள் பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்த உணவகம், வெதுப்பகம், வர்த்தக நிலையம் என மூன்று கடைகளுக்கு இவ்வாரம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் உணவகங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் உள்ளடங்கலாக மருத்துவ சான்றிதழ், உரிய அனுமதியின்றி இயங்கி வந்த வெதுப்பகம், உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஆகியவற்றுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உணவகங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நகரசபைக்கு கிடைக்க பெற்று வரும் முறைப்பாடுகளின் அடிப்படையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்ட நிலையில் இந்த நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக மன்னார் மூர்வீதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளை களஞ்சியப்படுத்தி, உரிய அனுமதி பெறாது இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கும், மன்னார் உப்புக்குளம் பகுதியில் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றுக்கும், மன்னார் பனங்கட்டு கொட்டு மேற்கு பகுதியில் இயங்கி வந்த ஒரு வர்த்தக நிலையத் திற்குமே சீல் வைக்கப்பட்டுள்ளது.



# கிறிஸ்மஸுக்காக இலங்கையில் மிகப்பெரிய கேக் தயாரிப்புப் பணி நேற்று நுவரெலியாவில் ஆரம்பம்

வரவிருக்கும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், நுவரெலியாவிற்கு வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக, இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கேக்கை நுவரெலியாவில் உள்ள அரலியா கிரீன் சிட்டி ஹோட்டலில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு மூலப்பொருள் கலவையைத் தயாரிக்கும் பணி இன்று நேற்று நுவரெலியாவில் உள்ள அரலியா கிரீன் சிட்டி ஹோட்டலில் பிரமாண்டமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த கேக் வடிவமைப்பு 90 கிலோ கிராம் எடையில் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறப்பு பழ கலவைகள், இறக்குமதி செய்யப்பட்ட வைன்கள், இயற்கை சுவைகளைச் சேர்க்கும் உள்ளூர் தேன், முந்திரி, எள், இலவங்கப்பட்டை, ஏலக்காய் மற்றும் கேரமல் போன்ற உள்ளூர் பொருள்கள் மற்றும் சுவையூட்டல் உள்ளிட்ட தேவையான பொருள்களை கலவையில் சேர்க்கும் செயல்முறை இங்கு நடந்தது.

இன்று தயாரிக்கப்படும் கலவை ஆறு நாள்களுக்கு ஒருமுறை மீண்டும் கலக்கப்பட்டு டிசம்பர் 23 ஆம் தேதி தனித்தனியாக சுடப்படும். அதன் பிறகு, இது 90 கிலோ கேக் படைப்பாக தயாரிக்கப்பட்டு, டிசம்பர் 24 ஆம் தேதி இரவு நடைபெறும் சிறப்பு கிறிஸ்துமஸ் விருந்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கேக் உருவாக்கம் வழங்கப்படும் என்று கிறிஸ்துமஸ் கேக் படைப்பின் தலைமை சமையல்காரர் சுரஞ்ச ஜெயசிங்க தெரிவித்தார்.

மேலும், நிகழ்வில் பேசிய அரலிய குழுமத்தின் நுவரெலியா ஹோட்டல் சங்கிலியின் பொது மேலாளர் தினேஷ் லொக்குயத்தேஹேகே, வரவிருக்கும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக, இந்த உருவாக்கம் உட்பட பல சிறப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய நாங்கள்கள் பணியாற்றி வருகின்றனர் எனக் கூறினார்.

சுற்றுலாப் பயணிகள் தங்கள் ஹோட்டல் சங்கிலிக்கு ஒரு சிறப்பு பங்களிப்பாகக் கருதப்படுகிறார்கள், மேலும் அவர்கள் மிகவும் மதிப்புமிக்க சொத்தாகக் கருதப்படுகிறார்கள் என்றார் அவர்.

சிறப்பு கேக்கை உருவாக்குவதற்கான கலவையை தயாரிப்பதில் அரலியா குழுமத்தின் நிர்வாகிகள், ஹோட்டல் மேலாளர்கள், ஹோட்டல் ஊழியர் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், சமையல்காரர்கள் மற்றும் பிற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட ஏராளமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பங்கேற்றனர்.












# ஜப்பானியக் கப்பல் குழுவினர் காலிமுகத் திடலில் பணியில்!

## இலங்கைக் கடற்படையுடன் இணைந்து கடற்கரை சுத்தம் செய்தனர்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானிய கடல் சார் தற்காப்புப் படைக் கப்பலான 'AKE-BONO' இன் குழுவினர் நேற்றுப் காலை காலி முகத்திடலில் இலங்கை கடற்படையுடன் இணைந்து கடற்கரை சுத்தம் செய்யும் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், 'சுத்தமான கடற்கரை – ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளம்' என்ற தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, தீவைச் சுற்றியுள்ள கடற்கரையை சுத்தம் செய்யும் சமூக சேவை திட்டத்திற்கு இலங்கை கடற்படை தொடர்ந்து பங்களித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.














# 1995 ஒக்டோபர் யாழ்ப்பாண இடப்பெயர்வு அவலம் வலி சுமந்து, வழி தேடிய வரலாற்றுப் பெருந்துயரம்

**1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 இல் அவலமிகு யாழ் இடப்பெயர்வின், 30 ஆவது ஆண்டின் நினைவு வலிகளை சுமந்து, தமிழர் வழி தேடிய துயரமிகு நாள்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா-**

உலக வரலாற்றில் எந்த ஓர் இனமும் சந்தித்திராத பாரிய இடப்பெயர்வை யாழ் மக்கள் சந்தித்தார்கள். 1995 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் திகதி இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வு மானுட வரலாற்றில் வலிசுமந்த வரலாறாகவே என்றும் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்துலட்சம் ஆகும். குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளினூடாக ஐந்து லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாள்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

மிகச்சரியாக இன்றைக்கு 30 வருடங்களின் முன் யாழ் இடப்பெயர்வானது 1995 ஒக்டோபர் 30இல் நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர நாள்கள் மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது.






எத்தனையோ ஆண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயர்வார்கள் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

## துயர வலிசுமந்த வரலாறு

இந்த துயரத்தை எக்காலத்தினாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன.

யாழ் இடம்பெயர்வின் போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா, அப்பா என வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாதக் கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஓர் அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாள்களாகும்.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாள்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு

தொடர்ச்சி▼





# 1995 ஒக்டோபர் யாழ்ப்பாண இடப்பெயர்வு அவலம் வலி சுமந்து, வழி தேடிய வரலாற்றுப் பெருந்துயரம்

தொடர்ச்சி▲

நிலத்தில் குழி தோண்டி புதைத்த கொடுமை மிக்க காலமாகும்.

**வலிகள் சுமந்து வழி தேடிய இடப்பெயர்வு**

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கைகள் போல தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தவை அல்ல. இந்த சூரியக்கதிர் நடவடிக்கை 1995 ஒக்டோபர் 17 இல் தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களிலிருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத்தரப்பினர் போரைத் தொடங்கியிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுகளும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடத்தி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றனர் எனக் கருதி பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் – மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில், அன்றைய கும்மிருட்டினில், அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி, உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமானக் குண்டு வீச்சினாலும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடியும் நிலையிலிருந்தும், வெட்ட வெளிகளில் பல

மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர். மூடை முடிச்சுக்களை கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப் போயின். நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலையங்கள் எனக் கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாள்களைக் கழித்தனர்.

**வலிசுமந்த வரலாற்றை யார் மறப்பர்?**

அன்றைய யாழ் மக்களின் இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக்குள்ளான

வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உலக வரலாற்றில் யாழ் மக்களின் துயரமிகு இடப்பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தித்திருக்க மாட்டார்கள்.

ஆர்மேனிய மக்களின் வரலாற்றில் நடந்த மிகப் பெரிய துயரமான 1915 இனப்படுகொலை சம்பவங்கள் போல் 1995 யாழ் இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில்இடம்பெற்றது.

1995 “சூரியக்கதிர்“ நடவடிக்கை எனும் அந்தக் கொடிய யுத்தத்தால், யாழ்ப்பாணம் தீவிர யுத்த காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்ட அந்த வலி, அதே வலி இன்னமும் தமிழ் மக்கள் மனதிலிருந்து நீக்கப்படவில்லை.

எத்தனை ஆண்டு காலமாக போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் தமிழர்கள் இன்னும் விடுதலைக்காய் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.





# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அலுவலர்கள் குழு நேற்றுத் திருமலையில்





**(எஸ்.கீதபொன்கலன்)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தலைமையிலான ஆணைக்குழு உயர் அலுவலர்கள் குழுவினர் நேற்று திருகோணமலைக்கு வருகை தந்து, மாவட்டத்தின் சிவில் அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

ஆணைக்குழுவின் கிழக்கு பிராந்திய இணைப்பாளரின் ஒழுங்கமைப்பில் குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு மற்றும் கலந்துரையாடலில் மாவட்டத்தின் தமிழ்,சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் பணியாற்றும் இருபதுக்கும் அதிகமான சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மனித உரிமைகள் தொடர்பில் தாம் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடினர்.

ஆணைக்குழுவின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர்,பிரதி செயலாளர் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக களஞ்சியசாலையில் தீ! கட்டுப்பாட்டில் கொண்டு வந்த தீயணைப்புக் குழுவினர்!!








**(நூருல் ஹுதா உமர்)**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தின், அம்பாறை கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள மாணவர் விடுதியின் பின்புற களஞ்சியசாலையில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது.

காலை சுமார் 7.20 மணியளவில் ஏற்பட்டதீவிபத்துகுறித்துதகவல்கிடைத்தவுடன், பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்ததன் பயனாக தீ விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீயை அணைப்பதற்காக அம்பாறை, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை தீயணைப்புப் படையினர் மட்டுமல்லாமல் சம்மாந்துறை பிரதேச சபையின் தீயணைப்புக் குழுவினரும் இணைந்து தீயணைப்பு பணியில் ஈடுபட்டனர்.

தீ விபத்து குறித்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் கூறுகையில் –

“தீப் பரவல் காலையில் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகமும் சம்மாந்துறைப் பொலிஸாரும் ஆராய்ந்து வருகின்றனர். தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர விரைந்து உதவிய அம்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை தீயணைப்புப் படையினர் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையின் தீயணைப்புக் குழுவினருக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றி தெரிவிபக்கிறோம்” – என்றார்.

மாணவர் விடுதியின் பின்புறம் அமைந்துள்ள – பாவனைக்கு உதவாத பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த – களஞ்சியசாலையில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. தீ விபத்தில் ஏற்பட்ட சேதத்தின் அளவு குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தினர் ஆராய்ந்து வருகின்றனர்.



# முல்லை. புதுக்குடியிருப்பு – ஒட்டிசுட்டான் வீதியில் போக்குவரத்தை ஒரு மணி நேரம் முடக்கிய யானை

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு – ஒட்டிசுட்டான் வீதியில் நேற்று முன்தினம் மாலை யானை ஒன்று வீதிக்கு வந்ததையடுத்து, பயணிகள் பெரும் அசௌகரியத்திற்கும் அச்சத்திற்கும் உள்ளாகினர்.

பிரதான வீதியான புதுக்குடியிருப்பு – ஒட்டிசுட்டான் வீதியில் யானை ஒன்று திடீரென வீதிக்குள் நுழைந்தது. இதனால் அந்த வழியாக சென்ற வாகனங்கள் மற்றும் பயணிகள் தங்களது பயணத்தை நிறுத்தி அச்சத்துடன் தரித்து நிற்க நேர்ந்தது.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் வீதியின் ஓரங்களில் தஞ்சம் புகுந்து திகைத்து நின்றனர். யானை சுமார் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக நடு வீதியில் நின்று பயணிகளை அச்சுறுத்தியது. அதனால் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த சில நாள்களாக மாலை நேரங்களில் இந்த வீதிக்கு காட்டு யானைகள் அடிக்கடி வருவதால் மக்கள் அச்சத்துடன் பயணம் செய்து வருகின்றனர். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2025




வாழ்வில் முன்னேறுவதற்கு உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமை மற்றும் அமைதி மேற்கொண்டால் எல்லாம் சரியாகி விடும். இன்று சமாளிப்பதில் சற்று சிரமம் காணப்படும்.

பிறருடன் பழகும் போது பொறுமை அவசியம். அமைதியுடன் நடந்து கொண்டால் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணை விரும்பும் வகையில் நடந்து கொள்வீர்கள்.ஒருவருக்கொருவர் அனுசரனையாக நடந்து கொண்டால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இல்லாவிடினும் கவலை வேண்டாம். எதிரபாராத பண வரவைக் கொண்டு உங்கள் செலவை சமாளிப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக நீங்கள் இன்று செயல்களை விரைந்து முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் நீண்ட காலப் பயன் தருவனவாக இருக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.உங்களிடம் சிறப்பு தகுதி காணப்படும் அதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இருவரும் மகிழ்வுடன் காணப்படுவீர்கள். உங்களின் உறவு சிறப்பாக இருக்கும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாக இருந்தால் கவனமாக செயலாற்றலாம். மகிழ்ச்சிக்கான மந்திரம் இதுவே.

உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி நன்கு திட்டமிட வேண்டும்.இன்று பணிகள் சிறிது அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். செலவும் காணப்படும் என்றாலும் அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். தேவையின்றி பதட்டப்பட வேண்டாம். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.




நம்பிக்கையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.இதனால் எல்லாவிதமான பிரச்சினைகளையும் சமாளிக்கலாம். உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். பணிகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி ஆற்றுங்கள். இன்று நேரத்தோடு செயல்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய நேரும். என்றாலும் உங்கள் தேவைகளை சமாளிக்கும் வகையில் உங்கள் பணப்புழக்கம் காணப்படும்.




நேர்மறை எண்ணம் மற்றும் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றியும் நன்மதிப்பும் கிடைக்கும். எதிர்மறை எண்ணத்தை தவிர்த்திடுங்கள்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். கவனமின்றி செயல்பட்டால் பணியும் தரம் குறையும். அதன் விளைவாக உங்கள் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையின் அனுசரணை கிடைப்பது இயலாது என்பதனால் நீங்கள் இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யதார்த்தமான உங்கள் அணுகுமுறை உங்கள் துணையை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நிதிநிலைமை சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைக்க வேண்டும். இதன் மூலம் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.




இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். பயனுள்ள செயல்களுக்கு அதனை பயன்படுத்துங்கள்.இன்று சௌகரியமாக இருப்பீர்கள்.

உங்கள் பணி இன்று தரமானதாக இருக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெறும்.

சிறந்த தகவல் தொடர்பால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார். உங்கள் இருவருக்குமிடையே மகிழ்ச்சியான இனிமையான தருணங்கள் காணப்படும்.

இன்று கடன்கள் பெற்று உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று திடமான ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் பேச்சில் தெளிவு காணப்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் சாதிப்பீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் குழப்பம் காரணமாக பணியில் கவனம் செலுத்த இயலாது. சகபணியாளர்களுடன் பொறுமையாக பழக வேண்டும். பணியை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

நிதிநிலைமையை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். செலவுகளை நிர்வகிக்க தெரிந்துகொண்டு அதிகம் செலவழிக்காமல் இருக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சிறப்பாக யோசித்து செயல்பட வேண்டியது அவசியம். தேவையற்ற எண்ணங்களை மனதில் கொள்ளாதீர்கள்.

பணியிடத்தில் இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்வதன் மூலம் அமைதி காணலாம்.

இன்று காதலில் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்களிடம் புரிந்துணர்வுடன் இருப்பார். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. என்றாலும் உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இன்றைய தினத்தை சமாளிக்கலாம்.

உணர்ச்சிவசப்படுதலும் பாதுகாப்பற்ற உணர்வும் தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2025




ஆரம்பத்தில் சில தடைகள் காணப் படும். உங்களின் தைரியத்தைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடின உழைப் பும் அர்ப்பணிப்பும் அவசியம். நம்பிக் கையுடன் இருக்க வேண்டும்.

இன்று கவனமாக பணியாற்ற வேண்டும். தேவையற்ற சஞ்சலங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். சிறப்பாக செயலாற்றுங்கள்.

தன்னுடைய விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று உங்கள் துணையின் எதிர்ப்பார்ப்பு காணப்படும். அதற்கு முயன்றால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பணம் காணப்படாது. உங்களிடம் இருக்கும் பணம் தேவையை விட அதிகமாக இருக்கும்.

இன்று முன்னெச்சரிக்கையாக உங்கள் கண்களுக் கும் பல்லிற்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செய லாற்றுவீர்கள். இதனால் பதட்டம் காணப்பட்டாலும் உங்களிடம் மகிழ்ச்சி யும் காணப்படும். விருப்பமான வெளி யிடங்களுக்கு செல்வது ஆறுதலைத் தரும்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும் மன நிலை உருவாகும். அது வெற் றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையின் உதவியுடன் விரைந்து முடி வெடுக்க விரும்புவீர்கள். நல்ல தொடர்பு காணப்படும். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத பண வரவு காணப்படும்.




இன்று அனைத்தும் சிறப்பாக நடக் கும். வாழ்வில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத விதமாக இன்று உங்களுக்கு பண வரவு அதிக மாக இருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான பிணைப்பு முன்பிருந்ததை விட இப்பொழுது அதிகமாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன் இன்று அதிக ரித்தும் பக்குவப்பட்ட நிலையிலும் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். இது வெற்றியை அளிக்கும். பிரார்த் தனை மூலம் மன அமைதி பெறுவீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். பணியில் கவனம் செலுத்தி னால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் உறவின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். குறை வாக செல்வழிக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான உணவு வகைகள் காரணமாக ஒவ்வாமை ஏற்படும் என்பதால் உணவு மற்றும் நீரில் கவனம் தேவை.

# இந்திய உதவித் திட்டத்தின் கீழ் தளபாடங்கள் அம்பாறை பாடசாலைகளுக்கு வழங்கி வைப்பு













(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட பாடசாலை களுக்கு மாணவர்களுக்கான தள பாடங்களை இந்திய உதவித் திட்டத் தின் கீழ் வழங்கிய நிகழ்வு நேற்று நிந்த வூர் அல் மஸ்ஹர் மகளிர் கல்லூரி யில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.ஏ. அஸ்ரப் தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானி கர் சந்தோஷ் ஜா தனது பாரியார் சகிதம் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலை வருமான ரிஷாட் பதியுதீனும்ம், சிறப்பு அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித், நிந்தவூர் கோட்டக்கல்வி பணிப் பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். அல் – மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் மற்றும் தளபாட உதவி பெறும் கல்முனை கல்வி வலய பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.